பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (26-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 30

# வடக்கில் நிவாரணப் பணிகளுக்கு அரசாங்கம் குறுக்கே நிற்க கூடாது!

## அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் 28 பேர் சந்திரிகாவுக்கு கடிதம்

கொழும்பு, டிசம்பர் 26

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் மனிதாபிமானப் பணிகளுக்கு குறுக்கே ஸ்ரீலங்கா அரசு நிற்கக் கூடாது.

அமெரிக்க காங்கிரஸில் (நாடாளுமன்றத்தில்) அங்கம் வகிக்கும் 28 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு கூட்டாக அனுப்பி வைத்துள்ள ஒரு கடிதத்தில் இவ்வாறு வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

காங்கிரஸ் பிரதிநிதிகள் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்.குடாநாட்டில்இருந்து இடம்பெயர்ந்து இருக்கும் லட்சக்கணக்கான அகதிகளுக்கு அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து வகைகள், உடைகள் வழங்க வேண்டிய அத்தியாவசிய மனிதாபிமான சேவை தொடர்பாக இக்கடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திடீரென சுகயீனம்

## நத்தார் உரையை இடையில் நிறுத்தினார் பாப்பரசர்

வத்திக்கான், டிச 26

கிறிஸ்து ஜெயந்தி தினமான நேற்று வத்திக்கானில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் மத்தியில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நத்தார் உரை நிகழ்த்தினார்.

ஆண்டு தோறும் மரபு முறைப்படி வழங்கும் நத்தார் உரையை நேற்று அவர் ஆற்றிக் கொண்டிருந்த சமயம் திடீரென அவருக்குச் சுகயீனம் ஏற்பட்டது

அதனால் அவர் தமது உரையை இடைநடுவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

இருபது நிமிட நேரம் ஓய்வெடுத்த பிறகு அவர் பின்னர் தொடர்ந்து உரையாற்றினார்.

75 வயதான பாப்பரசர் ' இன்புளுவென்ஸா'' காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

காய்ச்சல் காரணமாக நத்தார் நள்ளிரவுப் பிரார்த்தனையிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. (ஐ-3-7)

# பலாலிக்கான விநியோகம் மிக மோசமாகப் பாதிப்பு!

## துருப்புக்களை இடம் மாற்ற முடியாத நிலை

கொழும்பு, டிச. 26

பலாலிக்கான விநியோகம் பாதிக்கப்பட்டிருப்பது பாதுகாப்பு வட்டாரங்களுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருப்பதாக 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தினசரி 450 துருப்பினரை ஏற்றி இறக்கக்கூடிய நிலையில் விமானப்படை விமானங்கள் இருந்தன.

ஆனால் புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்களில் பல விமானங்களை படையினர் இழந்திருப்பதை அடுத்து நிலைமை மிக மோசமடைந்துள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் பலாலிக்கும் இடையில் ஏதேனும் ஒரு வழிப்பாதையில் தினசரி 150 துருப்புகளையே மாற்றீடு செய்யக்கூடிய இக்கட்டான நிலைக்கு விமானப்படை வந்துள்ளது.

பணிக்கு மீண்டும் சமுகமளித்துள்ள — மூவாயிரத்துக்கும் அதிகமான — படையினர் யாழ்ப்பாணத்தைச் சென்றடைய முடியாத நிலையில் உள்ளனர் என இராணுவம் மதிப்பிட்டுள்ளது.

சுமார் அறுபது வீதமான மாற்றீடு பணிகள் மேற்கொள்ளப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

— இவ்வாறு அச்செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

### புதிதாக 4 டாங்கிகள்

கொழும்பு, டிச. 26

''சூரியப்பிரகாசம்'' நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்ட 4 டாங்கிகளுக்குப் பதிலாகபுதிதாக நான்கு டாங்கிகளை அரசு கொள்வனவு செய்துள்ளது.

ரஷ்யத் தயாரிப்பான ரீ 85 ரக டாங்கிகளே புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டவை ரீ 81 ரக டாங்கிகள் ஆகும். (ஐ-3)

### 21 படையினர் காயம்

சாவகச்சேரி, டிச. 26

கடந்த வாரம் வலிகாமம் மேற்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் 21 இராணுவத்தினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஐ-3)

### விமானப்படைக்கு உக்ரைன் ஹெலிகள்

கொழும்பு, டிச. 26

ஸ்ரீலங்கா விமானப்படைக்கு உக்ரைன் நாட்டுத் தயாரிப்பான எம் ஐ. 24 ரக ஹெலிகள் ஆறு விரைவில் கிடைக்க விருக்கின்றன.

இந்தக் ஹெலிகள் பறக்கும் டாங்கிகள் எனக் கூறுமளவுக்கு கனரகத் தன்மை கொண்டவை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-3)

## மேலும் 3 மின்மாற்றிகள் கிழக்கில் நேற்று தகர்ப்பு!

### 12 கிராமங்கள் இருளில்

கொழும்பு, டிச. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் சம்மாந்துறைக்கு வடக்கே மூன்று பிரதான மின் மாற்றிகள் நேற்றுக் காலை இனந் தெரியாத நபர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இதன் காரணமாக மட்டக்களப்புக்கு வடக்கே உள்ள பன்னிரண்டு கிராமங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

கிழக்கில் கடந்த வாரமும் மூன்று மின் கோபுரங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தன.

கிழக்கில் தாங்கள் பலமான நிலையில் இருப்பதைக் காட்டுவதற்காக விடுதலைப் புலிகளே இத்தாக்குதலகளை நடத்தியுள்ளதாக பி. பி. ஸி செய்தியாளர் அமல் ஜெயசிங்கா தெரிவித்திருக்கிறார். (ஐ-3-6)

## டக்ளஸைக் கொல்ல வெளிநாட்டிலும் சதியாம்!

### அவரே வெளியிட்ட தகவல்

கொழும்பு, டிச. 26

தாம் பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தபோது அங்கும் தனது உயிருக்கு உலை வைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் —

ஆனால் தாம் அவற்றிலிருந்து தப்பி விட்டதாகவும் —

ஈ. பி. டி. பி தலைவரும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டிருக்கின்றார்.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான இரண்டு மாத கால பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய அவர் அதன் பின்னர் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி தகவலை வெளியிட்டிருக்கின்றார் (உ)

# வன்னிக்கு உதவிப் பொருள்களை எடுத்துவர பலவித கட்டுப்பாடுகள்

## படையினர் விதிப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் கவலை

கொழும்பு, டிச. 26

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு தொண்டர் [illegible] கள் வழங்கும் நிவா[illegible] விப் பொருள்களை வன்னிக்கு எடுத்துவர படையினர் பலவித கட்டுப் பாடுகளை விதித்திருப்பதாக கிளிநொச்சி [illegible] ராசா தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்கும் பொருள்களை மட்டுமே எடுத்துச் செல்ல வவுனியாவில் படையினர் அனுமதிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று வழங்கிய அரிக்கேன் விளக்குகளில் ஆயிரத்தை மட்டுமே எடுத்துச் செல்ல அனு

(6 ஆம் பக்கம் பார்க்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சுமார் 3 மணி நேரம்

# தளுவத்த பயணம் செய்த விமானம் காணாமற் போனதால் பரபரப்பு!

கொழும்பு, டிச. 26

யாழ்ப்பாணம் மீதான 'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த அண்மையில் விமானத்தில் பலாலியை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த சமயம் அந்த விமானத்துடனான கட்டுப்பாட்டு நிலையத் தொடர்புகள் திடீரென துண்டிக்கப்பட்டன; சுமார் இரண்டரை மணி நேரம் விமானத்துக்கு ஏற்பட்ட கதி பற்றி எதுவும் தெரியாததால் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் கடந்த 15ஆம் திகதி காலையில் இடம்பெற்றது.

அன்று காலை 6-30மணிக்கு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து சீனத் தயாரிப்பு ''வை - 12'' ரக விமானத்தில் பலாலி நோக்கி தளுவத்த புறப்பட்டார்.

சற்றுநேரத்தில் அந்த விமானத்துடனான தொடர்புகளை இரத்மலானை விமான நிலையம் இழந்தது. அதனையடுத்து பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இரத்மலானையிலிருந்து வவுனியா, பலாலி விமானக் கட்டுபாட்டு நிலையங்களுடன் அவசர அவசரமாக தொடர்பு கொள்ளப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட விமானத்துடனான தொடர்பு ஏதும் தங்களுக்குக் கிட்டவில்லை என வவுனியா, பலாலியிலிருந்து பதிலளிக்கப்பட்டது.

வழக்கமாக — ஆகக் கூடியது — இரத்மலானையில் இருந்து பலாலிக்கு விமானங்கள் சுற்றுவழிப் பாதையில் செல்ல ஒன்றரை மணி நேரம் எடுப்பது வழக்கம். ஆனால் இரண்டரை மணி நேரம் தாண்டி—காலை 9 மணி ஆகியும் — விமானம் பலாலிக்கு வந்து சேரவில்லை.

இராணுவத் தலைமையகத்திலிருந்து இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவுடன் 'மைக்ரோ அலை' தொலைபேசி மூலம் பலாலியிலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டது. தளுவத்த பயணம் செய்த விமானம் வந்து சேரவில்லை என்ற தகவலை பலாலியில் இருந்த கூட்டு நடவடிக்கைக்கான பிரதித் தளபதி மேஜர் சிறிலால் வீரசூரிய பதற்றமான குரலில் இராணுவத் தளபதிக்குத் தெரிவித்தார்.

விமானத்துடன் தொடர்பு கொள்வதற்காக வவுனியா விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து தீவிர, விடா முயற்சி எடுக்கப்பட்டது.

பலாலிக்கு அண்மையில் விழுந்துநொறுங்கிய மற்றைய விமானங்களின் கதி தளுவத்த பயணம் செய்த விமானத்துக்கும் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமே பாதுகாப்பு வட்டாரங்களில் பரபரப்புடன் எழுந்தது.

ஆனால் —

நீண்ட நேரத்தின் பின் திடீரென பலாலியுடன் அந்த விமானம் தொடர்பு கொண்டது. பலாலியில் இறங்குவதற்கு விமானி அனுமதி கோரினார்.

பாக்கு நீரிணைக்கு மேலாக வந்த விமானம் பலாலியில் தரையிறங்கியது.

றோஹான் தளுவத்தையை ஏற்றி வந்த விமானத்தின் விமானி, விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து விமானத்தைப் பாதுகாப்பதற்காக புதிய விமான பறப்பு பாதை ஒன்றை நாடினாராம்.

இரத்மலானையிலிருந்து புறப்பட்ட அவர் நேராக திருகோணமலை, சீனக்குடா மேலாகக் கடந்து ஆழ் கடலின் மேல் விமானத்தைச் செலுத்தி — நீண்ட பயணத்தின் பின் பாக்கு நீரிணைக்கு மேலாக வந்து பலாலியில் விமானத்தை இறக்கினார்,

விமானம் அதன் சாதாரண பாதையைத் தவிர்த்து — முன்னறிவிப்பு இன்றி — விலகிச் சென்றதால் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுத் துவக்கு வெடித்து பெண் படுகாயம்

வடமராட்சி, டிச. 26

வயலுக்கு நாசம் விளைவிக்கும் பன்றிகளை ஒழிக்க வீட்டில் தயாராக வைத்திருந்த கட்டுத் துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் கால்களில் படுகாயமடைந்தார்.

சரசாலை தெற்கைச் சேர்ந்த சிவராசா வசந்தகுமாரி (வயது 26) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே காயமடைந்தார்.

(ஐ-173)

# அரசில் தொடர்ந்து இருக்க வேண்டிய கட்டாய நிலையில் சமசமாஜிகள்!

### பேர்னாட் சொய்ஸா விளக்கம்

பொது நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் அரசின் கொள்கையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்

ஆனால் தற்போதைய அரசியல் சூழ்நிலை எமது கட்சி அரசில் தொடர்ந்து இடம் பெற்றிருக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

— இவ்வாறு கூறினார் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான பேர்னாட் சொய்ஸா.

கட்சியின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜோன் டி சில்வா தியேட்டரில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

''நாம் அரசில் இருந்தாலும் அரசின் கொள்கையை முற்றாக ஏற்றுக் கொள்கின்றோம் என்று அர்த்தம் அல்ல; தற்போதைய அரசியல் சூழ்நிலை அரசில் தொடர்ந்து இருக்க எம்மை கட்டாயப்படுத்தியுள்ளது — என்றும் அவர் கூறினார்.

இதே போன்ற கருத்தை கட்சியின் செயலாளரும் எம். பியுமான பற்றி வீரக்கோனும் அங்கு வெளியிட்டார். (உ)

# கிழக்கில் அரசாங்க நிர்வாகத்தை முற்றாக முடக்குவதில் புலிகள் மும்முரம்

### தொடர் தாக்குதல்களுக்கு தயாராகின்றனராம்

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் ஆரம்பித்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி, கிழக்கு மாகாணத்தில் தமது நிலையை ஸ்திரப்படுத்தி வரும் புலிகள் கிழக்கில் அரசின் ஆட்சியதிகாரத்தை முடக்கும் நடவடிக்கைகளை அரம்பித்திருக்கின்றனர்.

கிழக்கின் பொருளாதார வளத்தை நசுக்கவும், கிழக்கில் உள்ள இராணுவ மற்றும் கேந்திர நிலையங்கள் மீது பெரும் தாக்குதலைத் தொடுக்கவும் புலிகள் தயாராகி வருவதாக புலனாய்வுத் தகவல் தொரிவிக்கின்றன.

— இவ்வாறு ''த சண்டே லீடர்'' ''த சண்டே ரைம்ஸ்'' ஆகிய பத்திரிகைகள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஐ-உ)

# வடக்கு பிராந்திய கடற்படையின் நடவடிக்கை குறித்து அதிருப்தி!

### கிழக்குடன் ஒத்துழைக்கவில்லையாம்!

வடக்குப் பிராந்திய கடற்படையின் நடவடிக்கைகளுக்கும், கிழக்குப் பிராந்திய கடற்படையின் நடவடிக்கைகளுக்கும் இடையே உரிய தொடர்பு வசதிகள் இல்லை என்றும் -

அவை இரண்டும் தனித்துச் செயற்படுவதாகவும் கடற்படை வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து கிழக்குப் பிராந்தியக் கடற்படையினருக்கு உரிய முறையில் அறிவிக்கப்படுவதில்லை என்று கிழக்குப் பிராந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் கடற்படை நடவடிக்கை கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கடுமையாக வலியுறுத்தப்பட்டு வரும் வேளையில் வடபகுதி கடற்படையினர் நடந்து கொள்ளும் விதம் கிழக்கில் தமது நடவடிக்கைகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் அந்தக் கடற்படை அதிகாரி கூறியிருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடபகுதி கடற்படையினரின் நடவடிக்கைகள் குறித்து அங்கிருந்து வரும் கடற்படைப் படகுகள் மூலமே தெரிந்து கொள்ள வேண்டிய நிலை இருப்பதாக அந்த அதிகாரி கவலை தெரிவித்துள்ளார். (ஐ-10)

# தேங்காய் வியாபாரிகளிடம் வவுனியாவில் கப்பம்!

### தமிழ் ஆயுதக் குழு வசூல்!!

கொழும்பு, டிச. 26

வவுனியாவில் விற்பனையாகும் ஒவ்வொரு தேங்காய்க்கும் ஒரு ரூபாவைக் கப்பமாக தமிழ் ஆயுதக் குழு ஒன்றுக்குச் செலுத்த வேண்டியுள்ளதால் அங்கு தேங்காயின் விலை உயர்ந்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தனியார் வர்த்தகர்கள் எவரும் தாம் விரும்பிய விதத்தில் வவுனியாவிற்குத் தேங்காயைக் கொண்டுவரவோ அல்லது விற்கவோ முடியாது எனவும் —

இந்த ஆயுதக் குழுவின் நிபந்தனைகளுக்கு இணங்கிக் கப்பம் செலுத்தினால் மட்டுமே தேங்காய் கொண்டுவரவும், விற்கவும் அனுமதிக்கப்படும் எனவும் தேங்காய் வியாபாரிகள் தெரிவிக்கின்றனராம்.

இதனால் கப்பமாகச் செலுத்தும் பணத்தை வியாபாரிகள் பாவனையாளர்களிடமிருந்து அறவிடுகிறார்கள்.

எனவே வவுனியா வாசிகள் குறிப்பிட்ட ஆயுதக்குழுவிற்கு மறைமுகமாகக் கப்பம் செலுத்த வேண்டிய நிலை தோன்றியுள்ளது என்று அப்பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(ஐ-10)

# இம்மாத ஓய்வூதிய வவுச்சர்களை விநியோகிக்க விசேட ஏற்பாடுகள்

சாவகச்சேரி, டிச. 26

டிசம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான காசோலைகள் நேற்று சகல வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும்—

சகலரும் தமது ஓய்வூதியத்தை வங்கிகளிலேயே பெற வேண்டும் என்றும்—

ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியர்கள் தமது வவுச்சர்களைப் பெற விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த ஏற்பாடுகள் வருமாறு:-

★ சகல கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களது ஓய்வூதிய வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★ தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் நிரந்தரமாக இயங்கும் வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களது வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

★ யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகியவை தற்பொழுது இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் இயங்குவதால் இவ் வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களது வவுச்சர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

★ தென்மராட்சியில் இடம்பெயர்ந்து இயங்குகின்ற இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, சுன்னாகம், மானிப்பாய், காங்கேசன்துறை, மக்கள் வங்கி சுன்னாகம், சுன்னாதிட்டி, நவீன சந்தை, ஊர்காவற்துறை, ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி ஆகியவற்றின் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களது வவுச்சர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் [illegible] வைத்து விநியோகிக்கப்படும்.

(ஐ-3)


## உடன் சந்திக்கவும்

சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த
திரு. சுந்தரலிங்கம் இராசநாயகம் என்பவரை
சென். ஜேம்ஸ் இளவாலையைச் சேர்ந்த
திரு. ஞானமுத்து இருதயநேசன் விஜயகுமார்
குடும்பத்தினர்
உடன் எங்கிருந்தாலும் சந்திக்கும்படி கேட்கின்றனர்.

மே/பா. சி. ஈசன்,
பழைய பாம் றோட், வேம்பிராய்,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

தகவல்:
திருமதி இ. விஜயகுமார்

(39694)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்லும் களமாக யாழ் வீதிகளை மாற்றியிருந்தனர்

# எதிர்பாராத விதமாகப் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டோம்!

## இராணுவத் தளபதி பேட்டி

கொழும்பு, டிச.26

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் மிகக் கடும் எதிர்ப்பை தாங்கள் எதிர்நோக்க வேண்டியிருந்ததாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா ஒப்புக்கொண்டிருக்கிறார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்ததாவது:-

மிகப் பயங்கரமான ஆபத்துக்களை — விளைவுகளை — ஏற்படுத்தும் 'ஜொனி' மிதிவெடிகளை அவர்கள் பயன்படுத்தினர். சண்டையிடும் துருப்புக்களுக்கு பெரும் பாதிப்பை அவை ஏற்படுத்தின.

ஜொனி மிதிவெடிகளின் வலுவை அவர்கள் மிக ஆபத்தானவையாக மாற்றியிருந்தனர். அவை பாரிய கொடும் விளைவுகளை ஏற்படுத்துபவையாக இருதந்தன.முன்னர் அவை முழங்காலுக்குக் கீழ் காலை துண்டிப்பவையாக இருந்தன. ஆனால் தற்போது முழுக்காலுமே இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்போது ஜொனி மிதி மிதிவெடியில் ''போல் பெயரிங்'' போன்றவற்றையும் அவர்கள் பயன்படுத்துவதால் மற்றைய காலுக்கும் காயமேற்படும் நிலை உருவாகியுள்ளது.

எந்தத் தலைவனும் எதிரியைக் குறைத்து மதிப்பிடமாட்டான். அவர்கள் மிகவும் யுக்தி மிக்கவர்களாகச் செயற்பட்டனர். இந்தளவு எதிர்ப்பை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

### தற்காப்பு மிக்க பதுங்குகுழிகள்

அவர்கள் மிகவும் தற்பாதுகாப்பு மிக்க நிலைகளைக் கொண்டிருந்தனர்; குறுக்கு மறுக்காக பல வழிகளைக் கொண்ட பதுங்குகுழிகளைத் தயாராக வைத்திருந்தனர். சில பதுங்குகுழிகள் இருநூறு முன்னூறு மீற்றர் நீளமாக இருந்தன.

மிக லாவகமாக அமைக்கப்பட்ட இந்த பதுங்குகுழிகளை வானத்திலிருந்து அடையாளம் காண முடியாது

### கொல்லும் களமாக நாவலர் வீதி

நகரின் மத்திய பகுதிக்கு இட்டுச் செல்லும் நாவலர் வீதியில் குறுக்கு-மறுக்குமான இத்தகைய பாதுகாப்பு கால்வாய்கள் இருந்தன. இந்தப் பிரதேசம் கொல்லும் களமாக இருந்தது.

முன்னேறும் துருப்புகளுக்கு நிலமட்டத்திலிருந்து அவர்கள் வேட்டுகளைப் பொழிந்தனர். பின்னர் கட்டடங்கள் ஊடாகச் செல்லும் தொடர் பதுங்குகுழிகள் ஊடாக அவர்கள் கட்டடங்களுக்குள் பாதுகாப்புத் தேடினர்.

### 19 கட்டடங்கள் ஒன்றாகத் தகர்ந்தன

பல கட்டடங்களில் கண்ணி வெடிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஒரு முறை ஒரு கட்டடத்தில் இருந்த ஒரு பொறி வெடித்த போது 19 கட்டடங்கள் ஒன்றாகத்தகர்ந்தன.

இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது சில சந்தேகங்கள் இருந்தன. ஆனால் பீரங்கிப் படைக்கு நான் பாராட்டுத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். அவை மூலமே இலக்குகளை அமைதிப்படுத்த எம்மால் முடிந்தது.

ஆயுதங்கள், பீரங்கிகள், வெடிப் பொருள்கள், விசேட கருவிகள் போன்ற கட்டாயம் தேவையான ஆயுத தளபாடங்களை அரசு பெற்றுத் தந்ததாலேயே இராணுவத்தை சீரமைத்து இந்த வெற்றியை நாம் பெறமுடிந்தது.

எமக்கு அதிகாரிகளும், அரசுத் தலைவர்களும் தந்த ஒத்துழைப்பையும் நான் பாராட்ட வேண்டும்.

— இவ்வாறு இராணுவத் தளபதி அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார். (உ)

## வாகரைக்கு பஸ் சேவையை நடத்த தடை

கொழும்பு, டிச. 26

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதிக்கான பஸ் சேவையைத் தடை செய்த படையினர் அதனை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர்.

மீண்டும் வாகரைக்கான பஸ் சேவையை ஆரம்பிக்க அனுமதிக்குமாறு அண்மையில் விடுக்கப்பட்ட கோரிக்கையை படை உயரதிகாரி ஒருவர் ஏற்கமறுத்துள்ளார்.

## நல்லின கால்நடை கொள்வனவு

நல்லின கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுவதைத் தடுக்கும் நோக்குடன், அவற்றைக் கொள்வனவு செய்து வன்னிப் பெருநிலப் பரப்பில் பண்ணை நடத்த விரும்பும் விவசாயிகளுக்கு வழங்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நல்லினக் கால்நடைகளை விற்க விரும்புவோர் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள 'மனமகிழ்சோலை' பண்ணையுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நடுகடலில் வைத்து இறக்கப்பட்ட இரசாயன ஆயுதங்கள் எங்கே?

## பாதுகாப்புப் பிரிவினர் குழப்பம்

துருக்கியில் உள்ள துறைமுகம் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு இரசாயன ஆயுதங்கள் உட்பட நவீன ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல் இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் மிகத் தொலைவில் வைத்து அவற்றை வேறு சிறிய கப்பல் ஒன்றுக்கு மாற்றிவிட்டு மறைந்துள்ளது.

பாதுகாப்புப் பிரிவினருக்கு இவ்வாறு தகவல் கிடைத்திருப்பதாக ''ஞாயிறு லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது,

சரக்கு கப்பல் ஒன்றில் இருந்து சிறிய கப்பலுக்கு மாற்றப்பட்ட இந்த இரசாயன ஆயுதங்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டன என்ற தகவலை பாதுகாப்புப் பிரிவினரால் இதுவரை அறிந்துகொள்ள முடியாமற் போயுள்ளதாகவும் —

அவை வடக்கு அல்லது கிழக்கு கடற்கரையோரப் பகுதி ஒன்றில் இறக்கப்பட்டிருக்கலாம் எனப் பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் எங்கே தரையிறக்கப்பட்டன என்ற தகவலைப் பெற்றுக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்காமற் போனது பாதுகாப்புப் பிரிவினரைக் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெலிக்னைட், பொஸ்பரஸ் உட்பட இரசாயன ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு துருக்கியில் உள்ள துறைமுகம் ஒன்றில் இருந்து இக்கப்பல் புறப்பட்டதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (ஐ-10)

## கைதான தமிழரை அடைக்க மத்திய தடுப்பு முகாம்!

### அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, டிச. 26

பயங்கரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழர்களை விளக்க மறியலுக்காக சிறையில் தடுத்து வைப்பதற்குப் பதில், மத்திய தடுப்பு முகாம் ஒன்றில் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

— இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றை கொழும்பு மாநகர சபை நிறைவேற்றியிருக்கின்றது.

அடையாள அட்டை இல்லை என்பதற்காகவும் —

அவர்கள் மீது வெறும் சந்தேகம் இருக்கின்றது என்பதற்காகவும் —

தமிழர்களைக் கைது செய்து வேறு கிரிமினல்களுடன் சேர்த்து தடுத்து வைப்பது தவறு. தேவையானால் இத்தகைய சந்தேகத்துக்கு உள்ளான தமிழரை பொலீஸ் பாதுகாப்புடன் மத்திய தடுப்பு முகாம் ஒன்றில் தங்க வைக்கலாம் — இவ்வாறு மேற்படி பிரேரணை மீது உரையாற்றிய மாநகரசபையின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். (உ)

## ஓய்வூதிய நடை முறையில் திருத்தம்

ஓய்வூதியம் வழங்குவதில் நிலவி வரும் முரண்பாடுகளை நீக்கஅரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பாக சிபார்சுகளைச் சமர்ப்பிக்க ஜனாதிபதியால் ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# தீர்வுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்து அரசைச் சாடுகிறார் அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு, டிச. 26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்வுத் திட்டத்தை அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பான சந்தானந்த தேரர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றார்.

இந்த யோசனைகள் சிறுபான்மையினரை சாந்தப்படுத்தும் திட்டமேயன்றி வேறில்லை என்றார் அவர்.

கண்டியில் அஸ்கிரிய பீடத்தின் சர்வதேச பௌத்த நிலையத்தில் நடைபெற்ற— அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டம் பற்றிய — கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே பீடாதிபதி இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

தான் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்காக தனது அதிகாரத்துக்கு உட்பட்ட எல்லா வேலைகளையும் ஜனாதிபதி செய்ய முயற்சிக்கின்றார்.

### ஆட்சியை தொடர எதுவும் செய்வார்

பெரும்பான்மை சிங்களக் கட்சி ஒன்று தன்னுடைய பாட்டில் அரசை அமைக்க முடியாத நிலை வரும்போது சிறுபான்மைக் கட்சிகளிடம் திரும்பிச் சென்று அவர்கள் கேட்பதற்கு எல்லாம் தருவதாக உறுதியளிக்கின்றது.

நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு பெரும்பான்மை ஆசனத்தை மட்டும் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அரசை தக்க வைப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தீர்வு யோசனைகளை அங்கீகரித்து வெளியிட்டாலும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதியைப் பெறும் வரை அத்திட்டம் சட்டமாகாது என அரசு கூறுகின்றது. ஆனால் இந்த விளக்கம் எம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

### முன்னரே எதிர்த்தோம்

இத்தகைய தீர்வுத் திட்டம் ஒன்றை வெளியிடும் உத்தேசம் இருப்பதாக எமக்குத் தெரியவந்ததும் —

மூன்று நிக்காயாக்களின் தலைவர்களும் ஏனைய தேரர்களுடன் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து, இத்தகைய திட்டத்தை வெளியிடும் சந்தர்ப்பம் இதுவல்ல என்று திட்டவட்டமாகக் கூறினோம்.

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து, ஜனநாயகத்துக்கான சூழல் ஏற்படுத்தப்பட்ட பின்னரே இத்தகைய [illegible] டும் என்றும் —

அப்போதுதான் அது பயனுள்ளதாக இருக்கும் என்றும் நாம் கூறினோம்.

ஆனால் அவர்கள் நாங்கள் கூறுவதைச் செவி மடுக்க மறுத்துவிட்டார்கள்.

### சிங்கள இனத்தின் உரிமை பறிபோகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஜூலை 15 ஆம் திகதியுடன் ஒழிப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு திரும்பத் திரும்பக் கூறியது.

ஆனால் நாம் அதனை நினைவுபடுத்த முயலும் போது அரசு அதனைக் கவனியாது அதிகாரப் பரவாக்கல் திட்டத்தை முன்வைக்கின்றது.

இந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் சிங்கள பௌத்த சமூகம் தமது உரிமைகளை இழந்து கஷ்டப்படும் நிலையே ஏற்படும்.

மலைநாட்டு வாக்குகளை தொண்டமான் விற்பனைக்கு விட்டிருக்கின்றார். எல்லா கட்சிகளும் அந்த வாக்குகளை வாங்குவதற்கு முண்டியடிக்கின்றன.

### மலையகத்தின் ராஜா தொண்டமான்

தொண்டமான் இந்த அரசில் மிகப் பலம் கொண்டவராக இருக்கின்றார். கட்சி மாறுவோரைத் தடுக்க சட்டங்கள், விதிகள் இருந்தாலும் தமது விருப்பப்படி தொண்டமான் மட்டும் கட்சி மாறக்கூடியதாக இருக்கின்றது. அவருக்கு மட்டும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றது. அவர்தான் மலைநாட்டின் ராஜா!

இந்தக் கேலிக் கூத்தை பார்த்துக் கொண்டு நாம் எப்படி மௌனமாக இருப்பது?— இவ்வாறு பீடாதிபதி கேள்வி எழுப்பினார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

றபர் முத்திரை (Rubber Stamp) செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (ஆண்) உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: சோதி அச்சகம், கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்), சாவகச்சேரி. (39690)

### இட மாற்றம்

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)

### பயிற்சி வகுப்புக்கள்

பெரும்பான்மையான துறைகளில் தபால் மூலம் பயிற்சியளிக்கப்படும். தென் மராட்சியில் இடம்பெயர்ந்த விரிவுரையாளர்கள், விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியுடன் இல.508 மே/பா உதயன். (39693)

### சுடரொளி

சுடரொளி இந்து நாட்காட்டி (திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்) விலை 70/- மட்டுமே வெளியீடு கல்வயல் இந்து இளைஞர் மன்றம். தொடர்பு: திருக்கணித நிலையம் மட்டுவில். (39585)

★ யாழ்ப்பாணத்தில்

# 3 ஆயிரம் கண்ணிகளை படையினர் புதைத்தனர்!

கொழும்பு, டிச. 26

யாழ்ப்பாணத்தில் தாம் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் முகாம்களை அமைத்துள்ள படையினர், பாதுகாப்பு ஏற்பாடாகதாம் கைப்பற்றியுள்ள பிரதேசங்களில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான நிலக் கண்ணி வெடிகளைப் புதைத்துள்ளனர்.

— ''த சண்டே லீடர்'' பத்திரிகையில் அதன் செய்தியாளர்கள் எழுதிய பாதுகாப்பு நிலைவரங்கள் பற்றிய செய்திக் கட்டுரையில் இத்தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

வலிகாமத்தை இராணுவம் கைப்பற்றிய சமயம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையணியைச் சேர்ந்தோர் பெரும் எண்ணிக்கையில் அங்கு சிக்கிக் கொண்டிருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் ஒன்றில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைய வேண்டும்; அல்லது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என அப்போது அறிவிக்கப்பட்டது.

அந்தத் தற்கொலைப் படையணியினர் என்னவானார்கள் என்பது குறித்தும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## புதிய பிரிட்டிஷ் தூதர் நியமனம்

கொழும்பு, டிச. 26

இலங்கைக்கானபுதிய பிரிட்டிஷ் தூதராக டேவிட் தாதம் நியமனம் பெற்றுள்ளார்,

தற்போது தூதுவராக இருக்கும் ஜோன் பீல்ட் ஓய்வு பெறுவதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஐ-3)

மாகாண சபைகள் விவகாரம்:

# அரசுக்கு எதிராக ஐ. தே. க உயர் நீதிமன்றம் செல்லும்!

கொழும்பு, டிச. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் வடமத்திய, சப்பிரகமுவ மகாணசபைகளைக் கலைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக செய்திகள் அடிபடத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் —

அத்தகைய முயற்சிகளைத் தடுத்து நிறுத்த தாங்கள் உயர் நீதிமன்றத்துக்குப் போகப் போவதாக இரு மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் அறிவித்திருக்கின்றனர்.

ஊழல் மற்றும் அரசமைப்பு மீறல் குற்றச் சாட்டுகள் தொடர்பாக பதிலளிக்கும்படி கேட்டு மேற்படி இரு மாகாண முதலமைச்சர்களுக்கும் அவர்களது மாகாண ஆளுநர்கள் விளக்கக் கடிதம் அனுப்பியிருப்பது தெரிந்ததே.

அரசியல் உள்நோக்கத்திற்காக தமது கட்சியின் நிர்வாகத்தில் உள்ள மாகாண சபைகளைகளைக் கலைக்க பொது மக்கள் ஐக்கிய முன்னனி அரசு முயற்சிக்கின்றது என வடமத்திய மாகாண முதலமைச்சர் ஜி. டி. மகிந்த சோம குறிப்பிட்டார்.

## புளொட் உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, டிச, 26

மன்னார் மாவட்டபுளொட் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், நிதிப் பொறுப்பாளருமான அம்பலவாணர் முரளீதரன் என்பவர் கடந்த வெள்ளி இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ செல்லையா செல்வரத்தினம் அல்லது பாக்கியம் துரையப்பா — கோயிலாக்கண்டி வைரவர் கோயில், நாவற்குழி அல்லது புதுவளவு, ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.

★ கந்தையா சண்முகலிங்கம் — கச்சாய் றோட், கொடிகாமம்.

★ சங்கரலிங்கம் திருவரங்கம் — கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

★ விஜயதேவி கந்தையா — தாவளை, இயற்றாளை, கொடிகாமம்.

★ பொன்னையா கந்தசாமி — மாயக்கை, புலோலி மேற்கு, புலோலி.

★ பொன்னையா வள்ளியம்மா — துரையா மூலை, புலோலி தெற்கு, புலோலி. (ஐ)

# கொழும்பு தமிழ் கட்சிகளின் தற்காலிக கூட்டு முறிந்தது!

கொழும்பு, டிச. 26

அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்காக கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளிடையே ஏற்பட்ட தற்காலிக கூட்டு ஏற்பாடு முறிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் தொடர்பாக ஜனாதிபதியுடன் அல்லது அரசுடன் பேச்சு நடத்துவதற்கு இனிமேல் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து செல்வதில்லை என்றும் —

எந்தப் பேச்சுக்களிலும் தனித்தே பங்குபற்றுவது என்றும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவெடுத்து விட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன உட்பட கொழும்பில் இயங்கும் ஒன்பது தமிழ் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இணைந்து கடந்த 11 ஆம் திகதி கூட்டாக ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர் என்பது தெரிந்ததே. (ஐ-உ)

உ

ஓம் விராட் விஷ்வப் பிரம்மணே நம

உங்கள் இல்லங்களில் நடைபெறும்

**மங்கள வைபவங்களுக்கு**

தகரப்பந்தலில் அலங்கார வில்லுப்பந்தல், சொக்கட்டான் பந்தல் அமைத்து, மணவறை, கதிரை, மாலை, மினுங்கல் சோடனை, ஒலி, ஒளி அமைப்பு யாவையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள,

மல்லாகம், காளிகோவிலடி

**T. N. பந்தல் சேவையின்**

தரமான சேவையை தற்பொழுது

கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை, சாவகச்சேரி,
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி பின்புறம்)

என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்

[39594]

## முக்கிய அறிவித்தல்

சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
திருநெல்வேலி

18-10-1995 தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்ட எமது சைவச்சிறுவர் நிறைவாழ்வு இல்லம் 01-01-1996 தொடக்கம் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ''குருகுலம்'' வளாகத்தில் (கிளிநொச்சி) மீண்டும் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 18-10-1995 அன்று இல்லத்தில் தங்கியிருந்த பிள்ளைகள் அனைவரும் பெற்றோர்/பாதுகாவலருடன் குருகுலத்திற்கு வந்து தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர். வரும்போது பிள்ளைகள் கொண்டுவர வேண்டியவை: இரண்டுசோடி உடுப்பு, ஒரு போர்வை, ஒரு துவாய்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்

(39587)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 27-04-1928 உதிர்வு: 26-11-1995

**அமரர் சி. குமாரசாமி**
(நாவாந்துறை)

அன்பின் திருவுருவாய் எம் உள்ளமெலாம்
நினைந்திருந்த எம் குலவிளக்கே
நீங்கள் இம் மண்ணுலகை விட்டுப்
பிரிந்தாலும் எம் இதயத்தில் ஒளிவிளக்காய்
என்றென்றும் நிலைத்திருப்பீர்கள்.

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.இன்று (26-12-1995) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

தற்போதைய முகவரி:-
றஜிகுமார் வீதி,
பருத்தித்துறை வீதி,
சரசாலை வடக்கு.

145, கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(39589)

## காசோலை தவறிவிட்டது

24 12-1995 ஆம் திகதி குறிக்கப்பட்ட காசோலை இல. 653435, வைப்பு இல. 22852 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து கீழ் குறிப்பிடப்பட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

திரு. தா.நாகரத்தினம்
கண்டி வீதி,
பெரியபளை,
பளை.

(39597)

## விஞ்ஞானபீட இறுதியாண்டு
மாணவர்களுக்கான

## கலந்துரையாடல்

இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றும் விஞ்ஞான பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை (27-12-95) புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் தவறாது சமுகம்தரவும்.

மாணவ ஆலோசகர்
விஞ்ஞானபீடம்

(39596)

## கண்ணீர் அஞ்சலி

செந்தமிழ் நாட்டு மறத்தமிழா
எம் இனத்தின் விடுதலைக்காக
உன் உயிரை துச்சமென மதித்து
தீ மூட்டி யாகம் நடத்தினாய்
உன் யாகத்தால் எம் இனம்
விடுதலைப் பாதையின் விளிம்பிற்கு
வந்து விட்டதை உணர்கின்றோம்
வீரத்தமிழனே — நீ
உன் உயிரைத் துறந்தாய்
உன்னை நாம் ஒருபோதும் மறவோம்,

நாவற்குழி வணிகர் மன்றம்

[39683]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ரத்வத்தையின் மனப்பால்

★ எதிர்வரும் பெப்ரவரி மாத முடிவுக்குள் — அதாவது அடுத்த இரண்டரை மாத காலத்துக்குள் — விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து விடலாம்.

★ அதன் பின்னர் அரசின் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை இலகுவாக நடைமுறைப் படுத்தி விடமுடியும்.

—பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து கடந்த வாரம் விளக்கமளித்த போது பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை திருவாய் மலர்ந்து அளித்த நம்பிக்கை வார்த்தைகள் இவை.

கேணல் அனுருத்த ரத்வத்தை பகல் கனவு காண்கின்றாரா அல்லது மனப்பால் குடிக்கின்றாரா என்பது ஒரு புறமிருக்க —

இவ்வாறு ''கயிறு கொடுக்கும்'' விளக்கங்கள், வியாக்கினங்களை அப்படியே நம்பி விழுங்கிக் கொள்ளும் பிரகிருதிகள் எம்.பிக்கள் மத்தியிலும் இருக்கின்றார்கள் என்பதுதான் வியப்பானது.

தனது படைகளின் முழுப் பலத்தையும், ஆயுத தளபாடங்களின் முழு வளத்தையும் பயன்படுத்தி சூரியப் பிரகாச நடவடிக்கை மூலம் ஆட்கள் அற்ற — வெறும் கட்டடங்கள் மிஞ்சிய — பேய் நகரமாக யாழ்ப்பாணத்தை அரசுத் துருப்புகள் கைப்பற்றிக் கொண்டன என்பது உண்மைதான்.

இவ்வளவு பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் ஆட்களற்ற பகுதியை பிடித்தது படையினருக்கு ஒரு வெற்றியா என்று கேள்வி எழுப்பப்படுவது ஒரு புறமிருக்க —

அதனைப் பெரு வெற்றி எனக்கூறி தங்களுக்குத் தாங்களே சந்திரிகாவும் அனுருத்தவும் அவர்களது அரசும் மலர்க்கிரீடம் சூட்டிக் கொண்டாலும்கூட —

அதனை வைத்துக்கொண்டு புலிகளை இரண்டரை மாதத்துக்குள் இராணுவ ரீதியில் தோற்கடித்து விடலாம் என்று அனுருத்த கூறுவது நிலாவைப் பிடித்து சாக்கில் அடைப்பது போன்றதுதான்.

சூரியப் பிரகாச நடவடிக்கையின்போது புலிகளிடமிருந்து தங்களுக்குக் கிடைத்த கடும் எதிர்ப்பை, அதனால் ஏற்பட்ட பெரும் சேதத்தை ஆங்கில வார இதழ் ஒன்றில் துலாம்பரமாக கோடிட்டு காட்டியிருக்கிறார் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா.

அத்துணை எதிர்ப்பை காட்டியபோதும் தொடர்ந்து நின்று ஒரு களச்சமரைத் தொடராது, புலிகள் பின்வாங்கினார்களேயானால் அதற்குக் காரணம் இராணுவத் தந்திரோபாயமேயன்றி வேறில்லை.

எத்தனை கோடிகளைச் செலவிட்டு, எந்தளவு பெரிய படையெடுப்பை மேற்கொண்டபோதிலும், புலிகளின் இராணுவ கட்டமைப்பில் ஒரு சிறுபாதிப்பையேனும் ஸ்ரீலங்காப் படைகளால் செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் — இராணுவத் தந்திரோபாயங்களுடன் கூடிய பின்வாங்குதலை பிழையாக விளங்கிக் கொண்டு— இரண்டரை மாதத்திற்குள் புலிகளைத் தோற்கடிக்க மனப்பால் குடிக்கின்றார் அனுருத்த.

# சிறிலங்கா விமானப்படைக்கு நவீன "ரிமோட் கொண்ட்ரோல்" விமானம்!

## வவுனியாவில் கடந்த வாரம் பரீட்சார்த்த ஓட்டம்

கொழும்பு, டிச. 26

விமானி இன்றி ''ரிமோட் கொண்ட்ரோல்'' முறையில் இயங்கும் நீளம் குறைந்த விமானங்களை ஸ்ரீலங்கா விமானப்படை கொள்வனவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

''ட்ரோன்'' (Drone) ரகத்தைச் சேர்ந்த இந்த விமானம் தான் பறக்கும் பிரதேசத்தின் தரையில் உள்ள எந்தவொரு பொருளையும் தெளிவாகப் படமெடுத்து வழங்கும். இவ்விமானம் தரும் படத்தில் தரையில் செல்லும் மோட்டார்சைக்கிளின் இலக்கத் தகடு கூடத் தெளிவாகத் தெரியுமாம்.

ஒரு மத்திய செயற்பாட்டு நிலையத்திலிருந்து இந்த விமானத்தை இயக்கமுடியும், இந்த விமானம் ஓடுபாதையிலிருந்து புறப்படுவதை ஒருவரால் அவதானிக்க முடியும். அதன்பின்னர் கட்டளை நிலையத்தினால் அதன் செயற்பாடுகள் செயற்படுத்தப்படும் கட்டளை நிலையத்திலுள்ள தொலைக்காட்சி அமைப்பிற்கு தரையிலிருந்து வீடியோ படங்களை இது அனுப்பும்.

விமானத்தின் பறக்கும் திசை, உயரம், இலக்கு ஆகியவற்றையும் மத்திய நிலையத்திலிருந்து கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இஸ்ரேலின் உயர் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இந்த விமானத்தின் பரீட்சார்த்த ஓட்டத்தை பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா மற்றும் உயரதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமையன்று வவுனியாவில் நேரில் பார்வையிட்டனர்.

ஸ்ரீலங்கா அரசு ஏற்கனவே ஆறு விமானங்களை இஸ்ரேலிய விமான உற்பத்தி நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளது. இது பிரான்சியத் தயாரிப்பான மிராஜ் - 5 ரக விமானத்தை ஓரளவு ஒத்ததாயிருப்பினும் இஸ்ரேலிய உபகரணங்கள் அமெரிக்க இயந்திரம் ஆகியன இணைக்கப்பட்டுள்ளதால் மிராஜிலிருந்து வேறுபடுகிறது.

இந்த விமானத்தில் 30மி.மீ. பீரங்கிகள் இரண்டும், குண்டுகள், றொக்கட்டுகள், ஏவுகணைகள் ஆகிய வானிலிருந்து தரையைத் தாக்கவல்ல ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன. (உ-10)

## பெப்ரவரி மாதத்துக்கு முன் புலிகளை ஒழிக்க திட்டமாம்!

### அமைச்சர் அனுருத்த உறுதிமொழி

கொழும்பு, டிச 26

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வசதியாக—

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்று அரசு நம்புகின்றது.

உயர்மட்ட அரசு வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கடந்த வாரம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து விளக்கிக்கூறிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை —

பெப்ரவரி முடிவுக்குள் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதற்கான திட்டங்க்ள் தயார் என்றும்—

அதன் பின்னர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு தீவிரமாக ஈடுபட முடியும் என்றும் —

அங்கு கூறியதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ)

## இலங்கை தேசிய கொடி மீது சென்னையில்செருப்புவீச்சு!

சென்னை, டிச. 26

சென்னையில் தென்னாசிய (சாவ்) விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் ஜவஹர் விளையாட்டரங்கில் கடந்த வெள்ளியன்று சிறிலங்கா தேசியக் கொடி மீது செருப்புகளும், சப்பாத்துகளும் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் ஹாக்கிப்போட்டிகள் நடைபெற விருந்த இடத்தில் ஏற்றப்பட்டிருந்த ஸ்ரீலங்கா தேசியக் கொடி மீதே சிலர் இவற்றை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தீவிரப் போக்குடைய அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த சிலரே தேசியக் கொடி மீது செருப்புகளை வீசியதாகக் கருதப்படுவதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-10)

## கிழக்கில் பரவலாக விமானத் தாக்குதல்கள்

கொழும்பு, டிச. 26

கடந்த வாரம் கிழக்கில் பல பகுதிகளில் வீமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

செங்கலடி, சித்தாண்டி, வெருகல் ஆறு, கட்டை முறிச்சிக்குளம் தெற்கு மற்றும் மட்டக்களப்பு — திருகோணமலை எல்லைப் புறத்தில் உள்ள பிரதேசங்கள் ஆகியவற்றில் அமைந்திருந்த புலிகளின் சுமார் இருபது தளங்கள் மீதே கடந்த வாரம் திங்கட்கிழமையன்று விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலைகள் மீது இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

வாழைச்சேனை, அஸ்கொடவிலு, தரவிக்குளம், கட்டிமுரசு ஆகிய பிரதேசங்களிலும் இராணுவ, விமானப் படைகளின் கூட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### மந்திகை, யாழ். ஆஸ்பத்திரிகளில்

## தாதி மேற்பார்வையாளர் ஒருவர் மட்டுமே கடமையில்!

வடமராட்சி, டிச. 25

யாழ். போதனா வைத்திய சாலை, மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை ஆகிய இரு வைத்திய சாலைகளினதும் தாதி உத்தியோகத்தர்களுக்கான மேற்பார்வையாளராக ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகிறார்.

இவ்விரு வைத்தியசாலைகளிலும் 170 தாதிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களில் 135 பேர் யாழ். போதனாவைத்திய சாலையைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய 35 பேரும் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் மேற்பார்வையாளராக ஒருவர் மட்டுமே தினமும் 14மணி நேரம் கடமையாற்ற வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## காங்கேசன் ஆலையை மீண்டும் இயக்க முயற்சி

### ஜேர்மன் நிபுணர் குழு வருமாம்

கொழும்பு, டிச. 26

தென்னாசியாவிலேயே பெரிய சிமெந்து ஆலையாக விளங்கிய காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை திருத்தி மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப் படவிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

இத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு உதவ ஜேர்மன் நாட்டு நிபுணர் குழு ஒன்று விரைவில் இங்கு வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில மேற்கொள்ளப்பட இருக்கும் பாரிய புனர் நிர்மாண திட்டத்தின் ஒரு பகுதியாகவே சிமெந்து ஆலை மீண்டும் திறக்கப்பட்டவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஜனாதிபதியை கொல்லும் திட்டம் அம்பலமாம்!

''ரிமோட்- கொண்ரோல்'' முறையில் இயங்கும் வெடிகுண்டுகளைக் கொண்ட ஐந்து வாகனங்களை கொழும்புக்குள் அனுப்பி ஜனாதிபதி, சிரேஷ்ட அமைச்சர்கள், படைகளின் தளபதிகள் ஆகியோரைக் கொல்வதற்கு புலிகள் திட்டமிட்டிருந்தனராம்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நடத்திய புலன் விசாரணைகளில் இந்த விடயம் அம்பலத்துக்கு வந்திருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் இடம் பெற்றுள்ளோரின் நடமாட்டங்களை அவதானிப்பதற்காக விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருபது பேர் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கொழும்புக்குள் அனுப்பப்பட்டு விட்டதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. (உ)

## மருத்துவபீட நூலகம் ஹாட்லியில்

சாவகச்சேரி, டிச. 26

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீட நூலகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இயங்கும் என்று நூலக உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## குருவாயூர் கோவிலுக்கு அமைச்சர் ரத்வத்த விஜயம்

### பாதுகாப்பு கருதி இரகசிய பயணம்

கொழும்பு, டிச 26

இந்தியாவில் கேரளா மாநிலத்திலுள்ள குருவாயூர் கிருஷ்ணன் கோவிலுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கடந்த வாரம் தனது மனைவியுடன் விஜயம் செய்தார்.

பாதுகாப்புக் கருதி அவரது இந்த விஜயம் இரகசியமாக வைக்கப்பட்டதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விஜயத்தின் போது இருநூறுக்கு மேற்பட்ட பொலீஸார் அமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்த அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆலயத்துக்குக் குத்து விளக்கு ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

மத்திய யூனியன் கைத்தொழில் அமைச்சர் கே. கருணாகரன் அமைச்சரை விருந்தினர் மாளிகையில் வரவேற்றார். [ஐ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப்படைகளால் ஒரு போதும் புலிகளைத் தோற்கடிக்க முடியாது!

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகிறார்

கொழும்பு, டிச. 26

சிங்கள ஆயுதப் படைகளால் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது.

நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன இவ்வாறு கூறினார்.

''த சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார். அப்பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு.

கேள்வி:- அதிகாரப் பகிர்வுத்திட்டம் ஒன்றை உங்கள் கட்சி பிரேரிக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதை நமசமசமாஜக்கட்சி எதிர்க்கின்றது என்ற அர்த்தத்தை அது தராதா?

பதில்:- சிங்கள ஆயுதப் படைகளால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியும் என நாங்கள் நம்பவில்லை.

ஏனெனில் —

அடக்கப்பட்ட தமிழ் தேசியவாதத்தின் எல்லை மீறிய மனவெறுப்பின் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் புலிகள்.

இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் ,ஒவ்வொரு தமிழனினதும் இதயத்தையும் ஆத்மாவையும் காயப்படுத்துவதை மட்டுமே செய்யும்.

தமிழர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னரே தங்களை ஆளுவது யார் என்பதை அவர்கள் முடிவு செய்யமுடியும்.

வளம் மிக்க — மரபு ரீதியான — இராணுவத் தாக்குதலுக்கு முகம் கொடுப்பது சம்பந்தமாகவும் —

தங்களுக்கு சார்பாக வெளிநாடு தலையிடலாம் என்ற ரீதியிலும் —

விடுதலைப் புலிகள் கொண்டிருந்த மாயத் தோற்றத்தை ''ரிவிரஸ'' நடவடிக்கை உடைத்திருக்கக் கூடும்.

ஆனால் அது, விடுதலைப் புலிகளுக்கு உரமாக அமையும் தமிழ் தேசியத்தினிடையே காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதனை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

கேள்வி:- லங்கா சமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து ஸ்ரீலங்காவில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு இருப்பதாக உங்களுக்குத் தெரிகின்றதா? விலகிச் செல்லும் வாசுதேவ நாணயக்காரவும் நீங்களும் மனித உரிமைகள் தினத்தில் ஒருவருக்கு ஒருவர் அருகே வரும் நிலை ஏற்பட்டதே!

பதில்:- நிச்சயமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருக்கும் இடதுசாரிகள் தமது சந்தர்ப்பவாதத் தலைவர்களுடன் சேர்ந்து அல்லது அவர்களை ஷட்டு விட்டு முன்னணியிலிருந்து வெளியேறலாம் அல்லது தூக்கி எறியப்படலாம்.

மறுபுறத்தில் சிங்கள இனவாதத்திலிருந்து முறித்துக் கொண்டு வெளியேறும் நிர்ப்பந்தத்துக்கு ஜே. வி. பி. தள்ளப்படும். ஏற்கனவே ''ஹிரு'' போக்கை நாம் காண முடிகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி குறித்து விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, இ.தொ.கா., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியனவும் மிக அதிருப்தி கொண்டுள்ளன.

அத்துடன் தீவிரவாதக் குழுக்களும் இடதுசாரிப் பக்கம் திரும்பியுள்ளன.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிஏற்கனவேஇடதுசாரிகளுடன் வேலை செய்யத் தொடங்கி விட்டது —என்றார்.

---

வன்னிக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதி வழங்கப்பட்டிருக்கிறது.

அந்த நிறுவனம் ஆயிரத்து ஐந்து விளக்குகளை வெளியாஊடாக எடுத்து வந்தது ஆனால் ஆயிரத்தை மட்டுமே கொண்டு செல்ல அனுமதித்த படையினர் எஞ்சிய ஐந்து விளக்குகளையும் பறிமுதல் செய்தனர்.

உடுபிடவைகளை எடுத்துச் செல்லவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

படையினரின் சீருடைகளின் நிறத்தை ஒத்த உடுப்புகளை எடுத்து வரவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கறுப்பு நீலம், பச்சை, காக்கி வர்ண உடுப்புகளுக்கும் அனுமதி இல்லை.

இத்தகைய நிறங்களைக் கொண்ட 400 ரீ சேட்டுக்களை சர்வதேச நிறுவனம் ஒன்று வழங்கியிருந்தது. ஆனால் அவற்றை எடுத்துச் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை.

சிறு சிறு பெட்டிகளில் பொருள்களை எடுத்துச் செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

'குடும்ப அன்பளிப்பு' என்ற பெயரில் சிறு பெட்டிகளில் அடைக்கப்பட்ட சீனி, தேயிலை, ரின் மீன் என்பவற்றை எடுத்துச் செல்லவும் அனுமதிக்கப்பட வில்லை.

பொலித்தீன் பைகளில் பொருள்களை எடுத்துச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

— இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர் மேலும் விவரித்தார். (ஐ-3)

---

தளுவத்த...
(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானக்கட்டுப்பாட்டு நிலையங்களுடனான தொடர்பை அது இழந்தது என்றும் —

அதன் பயண நேரம் மிக நீண்டதாக அமைந்தது என்றும் —

தெரிவிக்கப்பட்டது.

ஒரு விமானியின் எதேச்சையான முடிவால் பாதுகாப்பு வட்டாரங்களில் வீண் பரபரப்பு ஏற்பட்டதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்தது. [உ]

---

நத்தார் புதுவருட
★ மலிவு விற்பனை ★
இன்று முதல் கொடிகாமம் நவீன சந்தையில்
மற்றுமோர் ஸ்தாபனம்
கோபிகா ஆடை அகம்
( ராசமாளிகா )
இல- 3, நவீன சந்தை, கொடிகாமம்.
சகல விதமான புடைவை வகைகளுக்கும்
பெயர்பெற்ற ஸ்தாபனம்
[சி-3069]

---

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் சிவலிங்கம்

(S. P. S. ரான்ஸ்போட் உரிமையாளர்)

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் வசித்தவருமாகிய பத்மநாதன் சிவலிங்கம் [S. P. S. றான்ஸ்போட், உரிமையாளர்] 23-12-95 இல் இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் — பேரம்மா (சுவிஸ்) தம்பதிகளின் அன்பு மகனும், திலகவதியின் அன்புக் கணவரும், திருவெங்கடம் தம்பதிகளின் மருமகனும், சிவரூபன் (கனடா), சிவரமணன், சிவகங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநேசன் (சுவிஸ்), நடராசா [கனடா], சறோஜினிதேவி, சுத்தானந்தன் (S.P.S.றான்ஸ்போட்), சர்வானந்தன்(S.P.S. றான்ஸ்போட்), விவேகானந்தன் (கனடா), காலஞ்சென்ற விஜயலட்சுமி, சிவபாதம் [கனடா], செல்வநாயகம் (சுவிஸ்), சிவராசா (கனடா), சோமசுந்தரம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள், இன்று (26-12-95) மாலை 4-00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. கயிலநாதன்
[மைத்துனர்]

ராணி மில்,
நெல்லியடி,
கரவெட்டி.

---

வடக்கில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தத்தை எழுதுகிறோம்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு போதுமான உணவு, குடிதண்ணீர், மருந்து வகைகள் இல்லை. விநியோகங்களை கொண்டு செல்வதற்கான மார்க்கங்களில் இருந்து அவர்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளனர்.

உகந்த இருப்பிட வசதியின்றி அவர்கள் அல்லற்படுகின்றனர்.

உகந்த சுகாதார வசதி கிடைக்காவிட்டால் தீவிரமாக வயிற்றோட்டம் பரவும் நிலை உருவாகும்.

விரைவாக போதியளவு நிவாரண உதவிகள் அவர்களை சென்றடையாவிட்டால் ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டுவிட நேரும். இந்த மனித அவலத்தைத் தவிர்க்க — வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தோருக்கு உதவ — சர்வதேச நிவாரணத் தொண்டர்கள் குறிப்பிட்ட உதவிகளை யாழ். குடாநாட்டுக்கு கொண்டு செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

யாழ். கடல் நீரேரியை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்திய அறிவிப்பை உடனடியாக ரத்துச் செய்து அகதிகள் தடையேதுமின்றி பாதுகாப்பான இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

படுமோசமான மனித அவலத்தை தவிர்க்கும் வகையில் எமது வேண்டுகோளுக்கு உடனடியாக கவனம் செலுத்துமாறு கேட்கிறோம்.

இலங்கையில் நிகழும் அரசியல் இழுபறியும், நெருக்கடியும் போரின் காரணமாக இடம் பெயர்ந்த லட்சக்கணக்கான அகதிகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான அத்தியாவசியப் [illegible] கூடாது. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

---

# தொண்டமான் மீது சந்திரிகா பாய்ச்சல்!

கொழும்பு, டிச. 26

அமைச்சர் தொண்டமானை, அண்மையில் நடந்த அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா அவமதிக்கும் விதத்தில் பேசினாராம்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தனது ''வம்பளக்கும்'' பக்கத்தில் இது பற்றிய தகவலை வெளியிட்டிருக்கிறது.

வழக்கம்போல—

அரசில் தனது முக்கியத்துவத்தையும்—

மிக நெருக்கடியான கால கட்டத்தில் அரசுக்கு உதவுவதற்கு தான் முன்வந்ததையும்—

அமைச்சர் தொண்டமான் அங்கு பிரலாபித்தாராம்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா —

'நான் உங்கள் ஆதரவை எப்போதும் கேட்கவில்லையே! — என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக முகத்தில் அடித்தால் போல கூறினாராம்.

'அமைச்சரவைக் கூட்டத்துக்கு உங்களை அழைத்தது யார்?' — என்ற தொனியில் சந்திரிகா அங்கு பேசியதாக வதந்திகள் அடிபடுகின்றன. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.— என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டது. (உ)

---

### ஆயுதங்கள் வீசப்பட்ட சம்பவம்:

# மற்றொரு ஜெட் விமானம் டில்லியில் தடுத்துவைப்பு!

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் விமானத்தில் இருந்து நவீன ஆயுதங்கள் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக மற்றொரு ரஷ்ய ஜெட் விமானம் புதுடில்லி விமான நிலையத்தில் வலுக்கட்டாயமாகத் தரையிறக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருகிறது.

இந்த விமானத்தில் இருந்த ஒன்பது சிப்பந்திகளும் புதுடில்லியில் உள்ள ஹொட்டேல் ஒன்றில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகளும், 'றோ' உளவு நிறுவன அதிகாரிகளும் அவர்களை விசாரணை செய்து வருகின்றனர்.

இந்த அன்ரனோவ் - 26 ரக ஜெட் விமானம் கராச்சியில் இருந்து காத்மண்டுவுக்குப் பறந்து கொண்டிருந்த சமயம் இந்திய சிவில் விமான போக்குவரத்து டைரக்டர் ஜெனரல் அலுவலகத்தின் அனுமதியைப்பெறாமல் இந்திய ஆகாயப் பரப்பினுள் பிரவேசித்ததை அடுத்தே இந்திய அதிகாரிகள் அதனை வலுக்கட்டாயமாகத் தரையிறக்கினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விமானத்தினுள் சென்று சோதனை நடத்துவதற்காக பொலீஸார் வெளியுறவுச் செயலகத்தின் அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மேற்கு வங்க மாநிலத்தில் ஆயுதங்களை வீசிய மர்ம விமானம் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டு பம்பாயில் தரையிறக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த விமானத்தில் இருந்த ஆறு விமானச் சிப்பந்திகளும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை —

ஆயுதங்கள் வீசப்பட்ட சம்பவத்தை அடுத்து மேற்கு வங்க மாநிலம் குர்தியானாவில் ஆனந்த் நகரில் உள்ள ஆனந்த மார்க்க தீவிரவாதிகளின் அலுவலகம் ஒன்றில் பொலீஸார் சோதனை நடத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் ஆனந்த மார்க்க தீவிரவாதிகள் மற்றும் சில வெளிநாட்டுப் பிரஜைகள் ஆகியோர் நீதி மன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். (ஐ-7)

---

## மட்டக்களப்பில் கடும் ஷெல் வீச்சு

மட்டக்களப்பில் செங்கலடி — பதுளை வீதிப் பகுதிகளை நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் சரமாரியான ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

அன்று காலை ஆரம்பமான இத்தாக்குதல் முற்பகல் 10 மணிவரை நீடித்தது.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை [ஐ-3[

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 26-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org